## 5. இல்வாழ்க்கை

41. *இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை*

**இயல்பாகவே அமைந்திடும் உறவுகள்**
**இல்லறத்தில் ஈடுபடுவோர்க்கு – பெற்றோர்,**
**இணையாய் வந்த துணை, குழந்தைகள் ஆகியோர்க்கு**
**இணைந்த கைகளாக என்றும் துணை நிற்பது கடமையே !**

42. *துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை*

**பற்றற்ற வாழ்வு நடத்தும் துறவியர்க்கும்**
**பசியால் வாடும் ஏழை எளியோர்க்கும்**
**பஞ்சத்தில் பரிதவிக்கும் ஆதரவற்றோருக்கும்**
**பக்க துணையாக இருப்பவன் தான் இல்லறத்தான் !**

43. *தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு*
*ஐம்புலத்தா றோம்பல் தலை*

**வாழ்ந்து மறைந்த முன்னோர்களையும்**
**வணங்குவதற்குரிய கடவுளையும்**
**வாஞ்சையுடன் வருகின்ற விருந்தினர், சுற்றத்தார்களைப் போற்றிடவும்**
**வாழ்க்கையில் இணைந்த தன் குடும்பத்தாரையும்**
**வாகையுடன் காப்பதுவும் இல்லறத்தானின் கடமை !**

44. *பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை*
*வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல*

**பழி பாவத்திற்குப் பயந்து ஈட்டிய செல்வத்தைப் பிறருக்கும்**
**பகுத்து உண்டு வாழ்கின்ற**
**பண்பட்ட இல்லறத்தானின் வாழ்வு**
**பயனான நிறைவான வாழ்வாகும் !**

45. *அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது*

**அன்பு இருந்தால் இல்லறத்தில்**
**அது பண்புடைய வாழ்க்கை !**
**அறம் இருந்தால் இல்லறத்தில்**
**அது பயனுடைய வாழ்க்கை !**

**46.** *அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்*
*போஒய்ப் பெறுவ தெவன்*

**அறநெறிப்படி இல்வாழ்க்கையினை**
**அமைத்துக் கொண்டால் – பெறுகின்ற**
**அத்துணைப் பயன்களையும் கண்டிப்பாக**
**அதைவிட வேறு நெறியில் பெற முடியாது !**

**47.** *இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
*முயல்வாருள் எல்லாம் தலை*

**முறையான இல்வாழ்க்கை வாழ்பவன்**
**முற்றும் துறந்து துறவற வாழ்வை வாழ**
**முயற்சிப்பவரை விட**
**முதன்மையானவர் !**

**48.** *ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை உடைத்து*

**தவத்தை விட ஆற்றல் உடையது எதுவெனில்**
**தன்னையும் அறநெறிப்படுத்தி–**
**தன்னைப் போல் பிறரையும் அறநெறிப்படுத்துகிற வாழ்வு**
**தனித்து பெருமை பெற்றது அத்தகைய இல்வாழ்க்கை !**

**49.** *அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
*பிறன்பழிப்ப தில்லாயின் நன்று*

**இல்வாழ்க்கையே அறம் என்றாலும்**
**"இல்லறம்" எனப்படுவது யாதெனின்**
**இன்ன பிறராலும் பழிக்கப்படாத**
**'இல் வாழ்க்கையே' நல்லறம் !**

**50.** *வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்*

**உலகத்தில் வாழ வேண்டிய முறைதனில்**
**உண்மையில் இல்லறம் நடத்துபவன்**
**உயர்ந்த வானில் வாழ்கின்ற தெய்வத்திற்கு**
**உள்ளாக இணையாக வைத்து மதிக்கப்படுவான் !**